## விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(மார்ச் 29-ம் தேதி முதல் ஏப்ரல் 2-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (24.03.17- 27.03.17)**

| | |
|---|---|
| (மி.மீ.) | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 36- 38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 22- 23 |
| வானம் (ஆக்டா) | 0- 2 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 57- 69 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 24- 32 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 2- 13 |
| காற்றின் திசை | 50- 360 |

**02.04.17 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>29.03.17 | நாள் 2<br>30.03.17 | நாள் 3<br>31.03.17 | நாள் 4<br>01.04.17 | நாள் 5<br>02.04.17 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 36 | 36 | 36 | 36 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 23 | 23 | 23 | 23 | 24 |
| வானம் (ஆக்டா) | 2 | 2 | 3 | 3 | 2 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 28- 66 | 28- 66 | 28- 66 | 28- 66 | 28- 66 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 9/ கிழக்கு | 8/ கிழக்கு | 9/ கிழக்கு | 8/ தென்கிழக்கு | 8/ கிழக்கு |

**வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசானது முதல் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்**

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| பருத்தி | காய்க்கும் பருவம் | தற்பொழுது நிலவும் வானிலையில் பருத்தியில் இளஞ்சிவப்பு காய்ப்புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த கீழ்கண்ட மருந்தில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும்.<br>• பாசலோன் 35% EC @ 2 லி/ எக்டர்<br>• டிரைசோபாஸ் 40 EC @ 2.5 லி/ எக்டர் |

| | | |
|---|---|---|
| மிளகாய் | காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் இலேசானது முதல் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் மிளகாயில் இலைப்பேனின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இலைப்பேனால் பாதிக்கப்பட்ட செடிகளின் இலை சுருண்டு காணப்படும். இலைக்காம்பு நீண்டு இருக்கும். இதனை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8% SL 3 மி.லி./ 10 லிட்டர் தண்ணீர் அல்லது டைமீத்தோயேட் 30% EC @ 1 மி.லி. / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| மல்லிகை | பூக்கும் பருவம் | தற்பொழுது நிலவும் வானிலையில் மல்லிகையில் மொட்டுப்புழுவின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு தயாகுளோபிரிட் 240 SC @ 1 மி.லி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| மா | காய்பிடிக்கும் பருவம் | தற்பொழுது நிலவும் வானிலையில் மாவில் பழஈயின் தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த கோடை உழவு செய்து மண்ணுக்குள் இருக்கும் கூட்டுப்புழுக்களை மண்ணில் மேல்பகுதிக்கு கொண்டுவருவதால் அவை சூரிய வெளிச்சத்தில் அழிந்துவிடும். மரத்துக்கு அடியில் விழுந்து கிடக்கும் தாக்கப்பட்ட பழங்களை சேகரித்து அழிக்க வேண்டும். மீத்தைல்யூஜனால் 1 மில்லி/ லிட்டர் தண்ணீரில் கலந்து அதனுடன் மாலத்தியான் ஒரு மில்லியை கலந்து மொத்தக்கலவையில் 100 மில்லி எடுத்து ஒரு பாட்டிலில் ஊற்றி எக்டருக்கு 25 இடங்களில் வைக்க வேண்டும். இந்த திரவத்தினால் பூச்சிகள் கவரப்படும். பின்பு அவற்றை சேகரித்து அழிக்கவும். |
| எலுமிச்சை | இலைப்பேன் | தற்பொழுது நிலவும் வானிலையில் எலுமிச்சையில் இலைப்பேனின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த மாலத்தியான் 0.5 மில்லிகிராம்/ லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |

குறுஞ்செய்தி:

இவ்வானிலையில், பருத்தி- இளஞ்சிவப்பு காய்ப்புழு- இதனை கட்டுப்படுத்த பாசலோன் 35% EC @ 2 லி/ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி